# பொய்வாதி

## கொல்லப்படுவார்

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ
لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ
ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ
فَمَا مِنكُم مِّنْ أَحَدٍ عَنْهُ حَاجِزِينَ

"அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம் மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை எம்முடைய தண்டனையிலிருந்து காப்பாற்ற இயலாது". (அல்ஹாக்க 44 – 47)

எவர் அல்லாஹ் தன்னிடம் கூறியதாக பொய்யான வார்த்தைகளை உருவாக்கி பிரச்சாரம் செய்வாரோ அவரை அல்லாஹ் இவ்வுலகில் வைத்தே தனது வலக்கரத்தால் பிடித்து, அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்து அழித்து விடுவான். அல்லாஹ்வின் அந்த கடுமையான தண்டனையிலிருந்து அவரை காப்பாற்ற எவராலும் முடியாது. இது ஒரு பொய்வாதிக்கு அல்லாஹ் தரும் தண்டனையாகும். ஆனால் உண்மையாளருக்கு அல்லாஹ் எல்லா வழிகளிலும் உதவி செய்வதுடன் உலகிலுள்ள எந்தவொரு சக்தியினாலும் அவரை அழித்துவிட முடியாத விதம் முன்னேற்றத்திற்குமேல் முன்னேற்றத்தை வழங்கி அருள்புரிகின்றான். இது ஒரு உண்மையாளரின் நேரடி அடையாளமாகும். திருக் குர்-ஆன் பல்வேறு வசனங்கள் வாயிலாக இந்த விஷயத்தை மிக தெளிவாக விளக்குகின்றது.

## உண்மையாளருக்கு அல்லாஹ் நிச்சயமாக வெற்றியைக் வழங்குவான்.

### ஹஸ்ரத் அஹமது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

*"ஆகாயத்திலிருந்து வானவர்களும் பரிசுத்த ஆவியும் இறங்கி வருவது, ஒரு பெரிய மனிதன் - தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் - பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டவராகவும், தெய்வீக வெளிப்பாடுகளால் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும் இப்பூமியின் மீது இறங்கும் போதுதான் நடைபெறுகிறது. பரிசுத்த ஆவி இம்மனிதருக்காக விசேஷமாக வேலை செய்யும்படி ஏவப்பட்டிருக்கிறது"*

(நூஹானி ஹசாயின் வாளியம் 3, பகுதி 12, ஃபத்ஹே இஸ்லாம் - இஸ்லாத்தின் வெற்றி (தமிழாக்கம் பக்கம் 22)

### ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) கூறுகிறார்கள்.



"இந்த எளிய அடியானே இந்நூற்றாண்டின் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீஃபத்துல்லாஹ் ஆவேன். அல்லாஹ் என்னை முஜத்தீதாக அனுப்பியிருக்கின்றான். ஆனால் உலமாக்களும், அவர்களின் அஹ்மதியா கலீஃபாவும், இக்காலத்தின் பிற முஸ்லீம் உலமாக்களும் அல்லாஹ்விடமிருந்து நபிமார்கள் தோன்றுகின்ற காலங்களைப் போன்று என்னை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்து விடுகின்றனர். அல்லாஹ் என் மீது முஜத்திதின் ஆடையை அணிவித்திருக்கின்றான். நான் மனித கரங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனல்ல. நிச்சயமாக நான் இக்காலத்தின் முஜத்தீத் ஆவேன். வானங்களையும் பூமியையும் படைத்த இறைவன் என்னுடன் பேசுகிறான். நான் அவனிடமிருந்து இறைச் செய்திகளை பெறுகிறேன். இறைத் தூதர்கள் பெறும் வெளிப்பாடுகளானது சாத்தானின் தலையீடுகளிலிருந்து முற்றிலும் விடுப்பட்டவையாக இருக்கும். அவ்வாறே நானும் இறைவனிடமிருந்து தூய்மையான வெளிப்பாடுகளை பெறுகிறேன்."

ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்களை ஹிஜ்ரா 15 –ஆம் நூற்றாண்டின் அல்லாஹ்வால் அனுப்பபட்ட முஜத்தீத் என்றும் கலீஃபத்துல்லாஹ், ரசூல் மற்றும் நபி என்றும் கடந்த 20 வருடங்களாக வாதித்து வருகிறார்கள். அல்லாஹ்விடமிருந்து நான் இறை வெளிப்பாடுகளைப் பெற்றுவருகிறேன், எல்லாம் வல்ல அல்லாஹ் என்னிடம் பேசுகிறான், மனிதகுலத்தை குறிப்பாக இஸ்லாமிய சமுதாயத்தை சீர்திருத்த நான் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கிறேன் என்று கூறுகிறார்கள். அன்னார், பல முன்னறிவிப்புகளை செய்து மக்களுக்கு கவனமூட்டி வருகிறார்கள். மேலும் திருக் குர்ஆனில் கூறப்பட்டிருப்பது போல் பொய் நபிக்கு உண்டான தண்டனையைப் பெறவில்லை. மாறாக, அன்னாரின் கரங்களால் நிறுவப்பட்ட "ஜமா அத்துல் ஸஹீஹில் இஸ்லாம்" என்ற இயக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தூய நல்லுள்ளம் கொண்ட மக்களுடன் முன்னேற்ற பாதையில் செல்கிறது; ஆம்! வெற்றியை நோக்கி செல்கிறது. அல்ஹம்துலில்லாஹ்.

உண்மையைத் தேடுபோர்களுக்கு, இவர் பொய்யரா இல்லை உண்மையாளரா? என்பதை திருமறையின் அடிப்படையில் அடையாளம் கண்டு கொள்ள எந்த சிரமமும் இருக்காது.

Prepared by
DR. E.THAHIR
Amir - North kerala
Ph: 9746525847

EDITING & PUBLISHING ARE DONE BY
AMIR
JAMAAT - UL-SAHIH-AL-ISLAM
TAMIL NADU Ph No: 917502272774

Translated by
Azim Ahmad